IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE

(FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.

DEPOSITION OF WITNESS

SC.NO. 160/2022

Deposition of Witness for P.W.11

| | |
|---|---|
| NAME | - கே. மேகநாதன் |
| FATHER NAME | - திரு.கிருஷ்ணன் |
| VILLAGE | - கீழ் முட்டுகூர் எல்.என். புரம் |
| TALUK | - கே,வி,குப்பம் |
| OCCUPATION | - பங்க் கடை |
| AGE | - 45 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 15.09.2025.

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். 5வது எதிரி ஆஜரில்லை மனு ஏற்பு.

<u>முதல் விசாரணை–</u>

நான் கீழ்முட்டுகூர் கிராமத்தில் வசித்து வருகிறனே். பங்க் கடை வைத்துள்ளேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். எதிரிகளுக்கும் கிருஷ்ணனுக்கும் நில பிரச்சனை இருந்ததாக கேயள்விப்பட்டேன். 10.06.2020 எனக்கு மதியம் 03.30 மணிக்கு சுரிய பிரகாஷ் போன் மூலம் தகவல் சொன்னார் நான் உடனே சம்பவயிடத்திற்கு மதியம் 03.45 மணிக்கு போனேன் அங்கு கிருஷ்ணனும் செல்வியும் அடிப்பட்டு இருந்தார்கள். சம்பவயிடத்தில் கிருஷ்ணனும் செல்வியும் மட்டும் இருந்தார்கள் தண்ணீர் கேட்டார்கள் நானும் சுரியபிரகாஷ்ம் தண்ணீர் கொடுத்தோம் ஊர்காரர்கள் எல்லாம் வந்துவிட்டார் ஆம்புலன்ஸ் வந்தது மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். செல்லும் வழியிலேயே கிருஷ்ணன் இறந்துவிட்டார் என தகவல் வந்தது– போலீசார் என்னை விசாரித்தார்கள்.

K-megnath

சாட்சியை பகுதி பிறழ் சாட்சியாக அறிவிக்கக்கோரி அனுமதி கோரி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கொடுக்கப்பட்டது.

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>

முருகன் , காந்தி, பாஸ்கரன், தாமோதரன், மோகன்ராஜ், சரண்ராஜ், நவீன்ராஜ் அனைவரும் சேர்ந்து கிருஷ்ணன் கட்டியிருந்த பம்புசெட்டை கடப்பாறையால் உடைத்துவிட்டு கிருஷன்ன செல்வியை அசிங்கமாக திட்டி நீங்கள் செத்தால் தான் இந்த இடம் தீர்வுக்கு வரும் என்று சொல்லி ஆளுக்கு ஒரு கொம்பால் கை கால் மற்றும் தலையில் கிருஷ்ணன் மற்றும் செல்வியை மாறி மாறி அடித்தார்கள் என்றும் நான் கிருஷ்ணன் செல்விக்கு தண்ணீர் கொடுக்கப் போகும்போது என்னையும் மிரட்டினார்கள் என்று போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

எதிகள் தரப்பு குறுக்கு விசாரணை – இல்லை

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு இன்று 15.09.2025 தேதியில் கையெழுத்திட்டார்.

15.9.25

Additional District Judge (FTC),
Vellore.